

திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் கும்முடிப்பூண்டி ஆண்கள் மற்றும் பெண்கள், கவரைப்பேட்டை, எளாவூர், சுண்ணாம்புகுளம், ஆரம்பாக்கம் மற்றும் புது கும்முடிப்பூண்டி அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ – மாணவியர்களுக்கு 1471 விலையில்லா மிதி வண்டிகளை மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், மு.மணிபாலன், இரா.அறிவழகன், அ.சகிலா அறிவழகன், எம்.கேசவன், மு.பாஸ்கரன், வேதச்சாலம், எஸ்.ராமஜெயம், எம்.ஜெயசந்திரன், டி.ஜெ.தமிழரசன், கே.ஆறுமுகம், எஸ்.உதயகுமார் அரிதாஸ், இஸ்மாயில், கருணாகரன், வெங்கடேசன், காளிதாஸ், மனோகரன், மெய்யழகன், சுகு க.பரத்குமார், ரவி, உமாபதி, பொன்சாந்தி, நந்தகுமார், பா.பரத்குமார், ஜெயராமன்,பாலு விநாயகம், அறிவழகன், கே.எஸ்.கோபி, இளவரசு, சாண்டிலியன், பாலுமகேந்திரன். ராஜேஷ்வரி, ரவிந்திரன், ஜெயா, பிரகாஷ், அஜித், ஜெயகோபி, ராஜ்குமார், மணி தசரதன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.




சென்னை, வேளச்சேரி தி வெஸ்டின் (The Westin) ஹோட்டலில் நேற்று (27.9.2024) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் பழங்குடியினரின் கலாச்சாரத்தை பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல் (PRESERVATION AND PROMOTION OF TRIBAL CULTURAL HERITAGE) தொடர்பாக இரண்டு நாட்கள் நடைபெறும் ‘தொல்குடி’ தேசிய மாநாட்டை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ( ‘THOLKUDI’ NATIONAL CONFERENCE ) குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, பழங்குடியினர் நல இயக்குனர் ச.அண்ணாதுரை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் செயலாளர் உமா மகேஸ்வரி, பூனே இந்திய மொழியியல் நிறுவன தலைவர் பேராசிரியர் காரபதி உமா மகேஸ்வர ராவ் ஆகியோர் உள்ளனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் மாநகர – ஒன்றிய – நகர – பேரூர் – பகுதிக் கழக

# மாணவரணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர், செப். 28-

திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவரணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் 30.09.2024 திங்கள் கிழமை காலை 09.00 மணி அளவில் திருவள்ளூர் அடுத்த காக்களூரில் உள்ள ஆர்.எம். கெஸ்ட் ஹவுஸில் (மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ.) எனது தலைமையில் நேர்காணல் நடைபெறுகிறது.

இதில் மாநில மாணவரணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், மாணவரணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன் ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணலை நடத்துகிறார்கள்.

இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, ஒன்றிய செயலாளர் ஆர். ஜெயசீலன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வே. தியாகராஜன் வரவேற்புரையாற்றுகிறார்.

எனவே மாநகர ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புக்கான விண்ணப்பித்தவர்கள் தவறாமல் வருகை தந்து பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# சென்னை - தர்மபுரி மண்டல ஆய்வுக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை மற்றும் தர்மபுரி மண்டல அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழுவின் ஆய்வுக் கூட்டம் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எனது தலைமையில் மாநில இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், துணைச் செயலாளர்கள் சி.தசரதன் மற்றும் ஆரூர். சா.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சென்னை மண்டல ஆய்வுக் கூட்டம் 30-09-2024 திங்கள்கிழமை காலை: 9.00 மணிக்கு திருவள்ளூர் (காக்களூர்) குரு காம்ப்ளக்ஸ் லட்சுமி மஹாலிலும் மற்றும் தர்மபுரி மண்டல ஆய்வுக் கூட்டம் 01-10-2024 செவ்வாய்க்கிழமை காலை: 10.00 மணிக்கு அரூர், தொட்டம்பட்டி சாலையில் அமைந்துள்ள பொன்கர்ப்பகம் திருமண மண்டபத்தில் நடைபெறும். இந்த ஆய்வுக் கூட்டத்தில் கீழ்கண்ட மாவட்ட, மாநகர ஆதிதிராவிடர் நலக்குழுவின் நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| சென்னை மண்டலம் | | தருமபுரி மண்டலம் |
|---|---|---|
| சென்னை வடக்கு | திருவள்ளூர் கிழக்கு | திருப்பத்தூர் |
| சென்னை வடகிழக்கு | திருவள்ளூர் மேற்கு | தருமபுரி கிழக்கு |
| சென்னை கிழக்கு | திருவள்ளூர் மத்திய | தருமபுரி மேற்கு |
| சென்னை மேற்கு | காஞ்சிபுரம் தெற்கு | கிருஷ்ணகிரி கிழக்கு |
| சென்னை தென்மேற்கு | காஞ்சிபுரம் வடக்கு | கிருஷ்ணகிரி மேற்கு |
| சென்னை தெற்கு | வேலூர் | |
| ஆவடி (ம) தாம்பரம் மாநகரம் | ராணிப்பேட்டை | |

பொருள்: ஆதிதிராவிடர் நலக்குழுவின் மாவட்ட நிர்வாகிகளின் கடந்த ஒரு ஆண்டுகள் செயல்பாடுகளில் ஆய்வு செய்தல், 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து மற்றும் கழக ஆக்க பணிகள்

**ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.,**
செயலாளர், தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக்கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன் படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண் பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் , 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல் நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியல் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6,மற்றும் 6பி,7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களில் சேர்க்கலாம்.

பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்க வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய10 அல்லது12 ஆம் வகுப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்காக இணைய தள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி (voter helpline mobile app) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப் பணிகளில் கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அந்தந்த வாக்குச்சாவடி நிலைமுகவர்களுடன் (BLA-2) இணைந்து மேற்கண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

காஞ்சிபுரம் மாவட்டத்தில்

# அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள்!

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தகவல்!

காஞ்சிபுரம், செப். 28-

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வருகின்ற காந்தி ஜெயந்திதினமான 02.10.2024 அன்று காலை 11.00 மணிக்கு கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற உள்ளன. கிராம சபைக் கூட்டங்களில் கீழ்க் காணும் பொருட்கள் குறித்து விவாதிக்கப்படும்.

கிராம ஊராட்சி நிர்வாகம், பொது நிதி செலவினம் மற்றும் திட்ட பணிகள் குறித்து விவாதித்தல். கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல், மக்கள் திட்டமிடல் இயக்கம், மாற்றுத் திறனாளிகள் கணக்கெடுப்பு, ஜல்ஜீவன் இயக்கம் மற்றும் இதர பொருட்கள் தொடர்பாக கிராம சபை கூட்டத்தில் பகிர்ந்து கொண்டு விவாதிக்கப்படும்.

மேலும், கிராம ஊராட்சிகள், தங்களது ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவு கணக்குகளை ஊராட்சி அலுவலகத்தின் தகவல் பலகையில் வெளிப்படுத்திட வேண்டும். பொது மக்கள் பார்வையிட ஏதுவாக பிளக்ஸ்பேனர் மூலம் வரவு செலவு கணக்கு (படிவம் 30-ன் சுருக்கம்) வைக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச் செல்வி மோகன் தெரிவித்துள்ளார்கள்.

மாவட்டப் பிரதிநிதி கே.வி.சுதர்சன் தந்தை

# ஜி.கிருஷ்ணமூர்த்தி 16 ஆம் நினைவு நாள் நிகழ்ச்சி!

பாண்டிச்சேரி செப். 28-

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக பிரதிநிதி கே.வி. சுதர்சன் தந்தையும்,முன்னாள் மகளிர் அணி துணை அமைப்பாளர் கே. வீரமணி கணவருமான,கழக முன்னோடி ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 13.9.2024 அன்று இயற்கை எய்தினார்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து கழகத்தினர் உள்ளிட்ட அனைவரும் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 16 ஆம் நினைவு நாள் நிகழ்ச்சி நாளை (29.9.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 7:30 மணி அளவில் எண்.4, மடுவ் பெட்லாஸ்பேட்டை பாண்டிச்சேரியில் நடைபெறுகிறது.




மாநகர போக்குவரத்துக் கழகம் (சென்னை தாம்பரம் பணிமனை) புதிய தாழ்தளப் பேருந்து இயக்க விழா தாம்பரம் பேருந்து நிலையம் தபால் நிலையம் அருகில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 10 பேருந்துகளை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்ணித்து கொடி அசைத்து தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, செ.சுரேஷ், எல்.பெரியநயகம், பி.ஜோதிக்குமார், கழக நிர்வாகிகள் வீ.முனுசாமி, கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், எம். சீனிவாசகுமார், எல்.பேகம் இரா.செல்வகுமார், ஆர்.செல்வகுமார், மா.கன்னியப்பன் மங்கலபுரம் பாபு, வி.கார்த்தி, ச.இராஜேஷ், எஸ்.கார்த்திக், வட்ட செயலாளர்கள் ஸ்ரீதர்குமார், எ.பாபு, எம்.விஜயன், எம்,வினோத், அ.லோகேஷ், வ.லோகநாதன், இ.கமலகண்ணன், பி.காளியப்பன், கே.பிரபாகரன், டிவி.முருகன், சித்திரம் வாசு, வி.தங்கராஜ், எம்.கே.குணசேகரன், கே.ராஜா, எம்.ரமேஷ், நீக்கி, ஆர். ஹரிஹரன், நவீன், உழியர் முன்னேற்ற சங்க தலைவர் சோ.மோகன்குமார், மற்றும் சங்க நிர்வாகிகள் பாண்டியன், த.பாலகிருஷ்ணன், கே.தயாளன், கே.துரைராஜ், பி.முருகன் மற்றும் பணிமனை செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.



எழும்பூர் தொகுதி, சூளை, அவதான பாப்பையா தெருவைச் சேர்ந்த கல்லூரி மாணவன் ப.பிரகாஷ் மற்றும் சேத்துப்பட்டு, தாஸ்புரம் பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவன் க.கவுதம் ஆகிய இருவரும் கடலில் மூழ்கி மறைவெய்தியதை அடுத்து, அம்மாணவர்களின் குடும்பச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவி அளித்திடக் கோரி, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் முதலமைச்சர் அவர்களுக்கு 13.09.2024 தேதியிட்டுக் கடிதம் அளித்திருந்தார். இக்கடிதத்தின் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவ்விரு மாணவர்களது குடும்பத்தினருக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 இலட்சம் வழங்கிட உத்தரவிட்டதன் அடிப்படையில், அந்நிதி வழங்கப்பட்டது. அவ்விரு மாணவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதி கிடைக்க ஏற்பாடு செய்து உதவிய கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமனை அக்குடும்பத்தினர் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில்

# 19 மாவட்டங்களில் கன மழை பெய்யும்!

சென்னை,செப்.28–

தமிழகத்தில் 19 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

கோவை மாவட்ட மலைப்பகுதிகள், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை (செப்.29) கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திரு நெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புகர் பகுதிகளில் அடுத்த 2 நாள்கள் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.